©
தமிழ்நாடு அரசு
2021

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 15.20 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 51] சென்னை, புதன்கிழமை, டிசம்பர் 22, 2021
மார்கழி 7, பிலவ, திருவள்ளுவர் ஆண்டு–2052

## பகுதி IV—பிரிவு 2 இன் இணைப்பு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது 2021 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 6 ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:

சட்ட எண் 32/2021.

**2013 ஆம் ஆண்டு அண்ணாமலை பல்கலைக்கழகச் சட்டத்தையும், 1981 ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகச் சட்டத்தையும், மேலும் திருத்தம் செய்வதற்கான மற்றும் 2021 ஆம் ஆண்டு டாக்டர் ஜெ ஜெயலலிதா பல்கலைக்கழகச் சட்டத்தை நீக்கறவு செய்வதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப் படுவதாகுக: —

**அத்தியாயம் – I.**

**முன்னுரை.**

1. (1) இந்தச் சட்டம் 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக் கழகங்கள் சட்டங்கள் (திருத்தம் மற்றும் நீக்கறவு) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது மாநில அரசு அறிவிக்கையின் மூலம் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**அத்தியாயம் – II.**

**2013 ஆம் ஆண்டு அண்ணாமலை பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.**

தமிழ்நாடு சட்டம் 20/2013. 2. (இதன் பின்பு '2013 ஆம் ஆண்டுச் சட்டம்' எனக் குறிப்பிடப்படுவதான), 2013 ஆம் ஆண்டு அண்ணாமலை பல்கலைக்கழகச் சட்டத்தின் 1 ஆம் பிரிவில், – 1 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) ஓரத்தலைப்புக்காக, பின் வரும் ஓரத்தலைப்பானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது: —

"குறுந்தலைப்பு, அளாவுகை, பொருந்துகை மற்றும் தொடக்கம்.".

(2) (2) ஆம் உட்பிரிவிற்காக, பின் வரும் உட்பிரிவுகளானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

"(2) இது விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர் மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியிருக்கின்ற பரப்பிடத்தை அளாவி நிற்கும்.".

"(2–A) இது, இப்பல்கலைக்கழகப் பரப்பிடத்திற்குள் அமைந்துள்ள, இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் அல்லது அதன்கீழ் செய்யப்பட்ட நிலை விதிகள், துணைமுறை விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளுடனிணங்கி, இப்பல்கலைக்கழகத்தினால் இணைக்கப்பெற்ற அல்லது அதனால் ஒப்புதலளிக்கப்பெற்ற அனைத்துக் கல்லூரிகளுக்கும், கல்வி நிலையங்களுக்கும் பொருந்துவதோடு, மேலும் இந்தச் சட்டத்தின்படி, இப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டிருப்பனவாக அல்லது அதனால் ஒப்புதல் அளிக்கப்பட்டிருப்பனவாகக் கொள்ளப்படும் அனைத்துக் கல்லூரிகள் கல்வி நிலையங்களுக்கும் பொருந்தும்.".

2 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. 2013 ஆம் சட்டத்தின் 2 ஆம் பிரிவில், –

(1) (a) ஆம் கூறானது (ad) கூறாக மறு எழுத்திடப்படுதல் வேண்டும் மற்றும் மறு எழுத்திடப்பட்ட (ad) கூறுக்கு முன்பு பின்வரும் கூறுகளானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

"(a)"இணைக்கப்பட்ட கல்லூரி" என்பது, இப்பல்கலைக்கழக பரப்பிடத்திற்குள் அமைந்துள்ளதும் இப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டதும் மற்றும் பல்கலைக்கழகத்தின் பட்டங்கள், பட்டயங்கள் அல்லது பிற சிறப்பு கல்விக்கான தேர்வுகளுக்கு அனுமதிப்பதற்கான பாடப்பிரிவு வகைகளுக்கு வகை செய்கின்றதுமான கல்லூரி அல்லது கல்வி நிலையம் எதுவும் எனப் பொருள்படும் மற்றும் இந்தச் சட்டத்தின்படி இப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படும் கல்லூரி ஒன்றையும் மற்றும் தன்னாட்சி கல்லூரி ஒன்றையும் உள்ளடக்கும்;

(aa)"ஒப்புதலளிக்கப்பெற்ற கல்லூரி" என்பது, இப்பல்கலைக்கழகப் பரப்பிடத்திற்குள் அமைந்துள்ளதும், இப்பல்கலைக்கழகத்தால் ஒப்புதலளிக்கப்பட்ட மற்றும் இப்பல்கலைக்கழகத்தின் சிறப்பு பட்டங்கள் மற்றும் பட்டயங்களுக்காக தேர்வுகளுக்கு அனுமதிக்கப்படுவதற்காக பாடப்பிரிவுகளுக்கு வகை செய்கின்றதுமான கல்லூரி எனப் பொருள்படுவதோடு, இந்தச் சட்டத்தின்படி இப்பல்கலைக்கழகத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்பட்ட கல்லூரி ஒன்றையும் உள்ளடக்கும்;

(ab) "தன்னாட்சி கல்லூரி" என்பது, பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவினால் தன்னாட்சி கல்லூரி எனப் பெயர் குறிக்கப்பெற்ற இணைக்கப்பட்ட கல்லூரி எதுவும் எனப் பொருள்படும்;

(ac) "கல்லூரி" என்பது, இப்பல்கலைக்கழகத்தால் நிறுவப்படும் அல்லது பேணிவரப்படும் அல்லது அதனால் ஒப்புதல் அளிக்கப்படும் அல்லது அத்துடன் இணைக்கப்படும் மற்றும் இப்பல்கலைக்கழகத்தின் பட்டங்கள், பட்டயங்கள் அல்லது பிற கல்வி சிறப்புகளுக்கான தேர்வுகளுக்கு அனுமதிக்கப்படுவதற்கான பாடப்பிரிவுகள் அல்லது பயிற்சி எதற்கும் வகை செய்கின்றதுமான கல்லூரி அல்லது கல்வி நிலையம் எதுவும் எனப் பொருள்படும்;";

(2)(c)ஆம் கூறுக்கு பின்பு, பின்வரும் கூறானது, உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

"(ca) "அரசுக் கல்லூரி" என்பது இணைப்புப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள கல்லூரி ஒவ்வொன்றும் எனப் பொருள்படும்; ".

(3) (f) ஆம் கூறுக்கு பின்பு, பின்வரும் கூறுகளானவை உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

"(fa) "முதல்வர்" என்றால், இணைக்கப்பட்ட கல்லூரி ஒன்றின் தலைவர் எனப் பொருள்படும்;

(fb) "இணைப்புப்பட்டியல்" என்பது, இந்தச் சட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்புப் பட்டியல் எனப் பொருள்படும்; ".

(4) (i) ஆம் கூறுக்கு பின்பு, பின்வரும் கூறானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

"(ia) "பல்கலைக்கழகம் பரப்பிடம்" என்பது விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய பரப்பிடம் எனப் பொருள்படும் ;".

4. 2013 ஆம் ஆண்டு சட்டத்தில் 4 ஆம் பிரிவில், — 4 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

(1) (4) ஆம் கூறில், (a) ஆம் உட்கூறில் "பல்கலைக்கழக கல்லூரி அல்லது ஆய்வுக் கூடம்" என்ற சொற்றொடருக்காக, "பல்கலைக்கழகம் அல்லது ஓர் இணைக்கப்பெற்ற கல்லூரி அல்லது ஓர் ஒப்புதல் அளிக்கப்பெற்ற கல்லூரி" என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (6) ஆம் கூறுக்குப் பின்பு, பின்வரும் கூறுகளானவை உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

"(6a) வகுத்துரைக்கப்பட்ட வரைக்கட்டுகளின் படி, கல்லூரிகளை, பல்கலைக்கழகத்தில் இணைத்தல் மற்றும் இணைப்பை திரும்பப் பெறுதல்:

வரம்புரையாக, அத்தகைய கல்லூரியை நிறுவுவதற்கு, அரசின் அனுமதி பெறப்பட்டாலன்றி மற்றும் அத்தகைய அனுமதிக்கான நிபந்தனைகளும் வரைக்கட்டுக்களும் எவையேனுமிருந்து இணங்கி நடக்கப்பட்டாலன்றி கல்லூரி எதுவும் இப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படுதல் ஆகாது;

(6b) வகுத்துரைக்கப்பட்ட வரைக்கட்டுகளின்படி இப்பல்கலைக்கழகத்தின் சிறப்புப்பட்டங்கள் மற்றும் பட்டயங்களுக்கான தேர்வுகளுக்கு அனுமதிக்கப் படுவதற்கான படிப்புப் பிரிவுகளுக்கு வகை செய்கின்ற கல்லூரிகளுக்கு ஒப்புதலளித்தல் மற்றும் அத்தகைய ஒப்புதலை திரும்பப்பெறுதல் :

வரம்புரையாக, கல்லூரியினை நிறுவுவதற்கு, அரசின் அனுமதி பெறப்பட்டு அத்தகைய அனுமதிக்கான நிபந்தனைகளும் வரைக்கட்டுகளும் எவையேனுமிருப்பின் இணங்கி நடக்கப்பட்டாலன்றி, அத்தகைய கல்லூரி எதுவும் இப்பல்கலைக்கழகத்தினால் ஒப்புதலளிக்கப்படுதல் ஆகாது ;

(6c) வகுத்துரைக்கப்பட்ட முறையிலும், வரையறைகளின்படியும், கல்லூரி எதனையும் அரசின் இசைவுடன் தன்னாட்சிக் கல்லூரியென பெயரிட்டுக் குறிப்பிடுவது அல்லது அவ்வாறு குறிப்பிடப்பட்டதை நீக்கிக் கொள்வது ;

(6d) இப்பல்கலைக்கழகம் தீர்மானிக்கலாகும் அத்தகைய முறையிலும் அத்தகைய நோக்கங்களுக்காகவும் இப்பல்கலைக்கழக பரப்பிடத்திற்குள் உள்ள கல்லூரிகள், கல்வி நிலையங்கள் மற்றும் ஆய்வுக் கூடங்களுக்கிடையே ஒத்துழைப்பை ஊக்குவித்தல் ;

(6e) தேவைப்படும் கால இடைவெளிகளில் மதிப்பீடுகளை அல்லது ஆய்வுகளை நடத்துதல் மற்றும் கல்லூரிகளின் கல்விச் சிறப்பினை மேம்படுத்த வகுத்துரைக்கப்பட்டவாறான தக்க நடவடிக்கையை எடுத்தல்;

(6f) இணைக்கப்பட்ட கல்லூரிகளை கல்வி முறையில் கண்காணித்தல் கல்விச் சிறப்பினை எய்துவதற்காக கட்டுப்பாட்டு அமைப்பு முறையை வகுத்துரைத்தல்;".

5. 2013 ஆம் ஆண்டுச் சட்டத்தின் 4 ஆம் பிரிவிற்குப் பிறகு, பின் வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:— 4–A எனும் புதியபிரிவினை உட்புகுத்துதல்.

"4–A. கல்லூரிகள் பிற பல்கலைக்கழகம் எதனுடனும் இணைக்கப்படுதலாகாது மற்றும் கல்வி நிலையங்களுக்கு பல்கலைக்கழகத்தால் ஏற்பிசைவளிக்கப் பெறுதல்.— (1) அண்ணாமலை பல்கலைக்கழகம் தவிர பிற பல்கலைக்கழகம் எதனுடனும், இப்பல்கலைக்கழகப் பரப்பிடத்திற்குள்ளாக உள்ள கல்லூரி எதுவும் இணைக்கப்படுதல் கூடாது.

(2) இம்மாநிலத்தில் உள்ள பிற பல்கலைக்கழகம் எதனுடனும் இணைக்கப்பட்டுள்ள அல்லது அதனோடு தொடர்புடைய அல்லது அதனால் பேணப்படும் கல்லூரி அல்லது கல்வி நிலையம் எதுவும் அரசின் மற்றும் தொடர்புடைய பல்கலைக்கழகத்தின் முந்திய ஒப்புதலளிப்புடனல்லாமல், எந்த நோக்கத்திற்காகவும் இப்பல்கலைக்கழகத்தால் ஏற்பிசைவு அளிக்கப்படுதலாகாது.''.

5 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

6. 2013 ஆம் ஆண்டு சட்டத்தின் 5– ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவின் இறுதியில் பின்வரும் சொற்றொடரானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது :—

''மற்றும் இப்பல்கலைக்கழகத்தினால் பேணப்பட்ட அல்லது ஒப்புதல் அளிக்கப்பட்ட அல்லது அதனுடன் இணைக்கப்பட்ட கல்லூரி எதுவும்.''.

19 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

7. 2013 ஆம் ஆண்டு சட்டத்தின் 19 ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவில்,—

(1) ''வகை I– பதவி வழி உறுப்பினர்கள்'' என்ற தலைப்பின் கீழ் (b) மற்றும் (f) –கூறுகளானவை விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(2) ''வகை II – பிற உறுப்பினர்கள்'' என்ற தலைப்பின் கீழ் (a) முதல் (f) வரையுள்ள கூறுகளுக்காக, பின்வரும் கூறுகள் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது;–

''(a) அரசின் பரிந்துரையின் பேரில் வேந்தரால் பெயர் குறித்து நியமிக்கப்படக்கூடிய, அரசின் சமூக நீதி மற்றும் கொள்கைகளுடன் தொடர்புடைய சிக்கல்கள் எதுவும் உள்ளடங்கலான நிர்வாகம், கல்வி மற்றும் நிதி பொருட்பாடுகளில் துணைவேந்தருக்கு வழிகாட்டும் இரண்டு சிறந்த நபர்கள்;

(b) ஒற்றை மாற்று வாக்குமுறை வாயிலான விகிதாசார பிரதிநிதித்துவ அமைப்பிற்கிணங்க இணைக்கப்பட்ட கல்லூரிகளின் முதல்வர்களால் அவர்களுக்கிடையே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள்;

(c) ஒற்றை மாற்று வாக்குமுறை வாயிலான விகிதாசார பிரதிநிதித்துவ அமைப்பிற்கிணங்க கல்விமன்றத்தின் உறுப்பினர்களான இணைக்கப்பட்ட கல்லூரிகளின் முதல்வர்களைத் தவிர, பிற ஆசிரியர்கள் அவர்களுக்கிடையே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இரு உறுப்பினர்கள்.

**விளக்கம்.**— இந்த கூறின் நோக்கத்திற்காக, ''ஆசிரியர்கள்'' என்பது இணைக்கப்பட்ட கல்லூரிகளின் ஆசிரியர்களால் அவர்களுக்கிடையே இருந்து கல்வி மன்றத்திற்கு தேர்ந்தெடுத்த ஆசிரியர்கள் என்று பொருள்படும்.

(d) துணைவேந்தரின் பரிந்துரையின் பேரில் வேந்தரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட புலத்தலைவர் அல்லது இயக்குநர் ஒருவர்;

(e) துணைவேந்தரின் பரிந்துரையின் பேரில் வேந்தரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர்;

(f) பதவி மூப்பிற்கிணங்க சுழற்சிமுறையில் துணைவேந்தரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழக இணைப்பேராசிரியர்;

(g) பதவி மூப்பிற்கிணங்க துணைவேந்தரால் பெயர் குறித்து சுழற்சி முறையில் நியமிக்கப்பட்ட பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர் ஒருவர்; மற்றும்

(h) பல்கலைக்கழக பரப்பிடத்திற்குள், தொகுதி எதனின் சார்பாளராயிருக்கும், அதன் உறுப்பினர்கள் அவர்களுக்கிடையே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் ஒருவர்.'' ;

(3) (4) ஆம் உட்பிரிவில், —

(a) (a) ஆம் கூறில், ''அல்லது மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறையை பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்'' என்ற சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(b) (b) ஆம் கூறில் ''அல்லது மருத்துவக் கல்வி இயக்குநர்'' என்ற சொற்றொடரானது விட்டு விடப்படுதல் வேண்டும்.

8. 2013 ஆம் ஆண்டு சட்டத்தின் 20 ஆம் பிரிவில், — 20 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

(1) (f) கூறுக்குப் பின்பு, பின்வரும் கூறுகளானவை உட்புகுத்தப்படுதல் வேணடும், அதாவது: —

''(fa) பல்கலைக்கழக பரப்பிடத்திற்குள்ளான கல்லூரிகளை இணைப்பதற்கும் விலக்கிக் கொள்வதற்குமான வரைக்கட்டுக்களை வகுத்துரைத்தல்;

(fb) கல்லூரியொன்று எந்த முறையிலும் மற்றும் எந்த வரைக்கட்டுகளுக்குட்பட்டும் தன்னாட்சிக் கல்லூரியென பெயரிட்டுக் குறிப்பிடப்படலாம் என்பதையும், அவ்வாறு பெயரிட்டுக் குறிப்பிடுவதாவது அறவு செய்யப்படலாம் என்பதையும் வகுத்துரைத்தல்;

(fc) கல்லூரிகளின் மற்றும் ஒப்புதல் அளிக்கப்பட்ட கல்லூரிகளின் மாணவர்களுக்காக கல்விமன்றமானது தீர்மானிக்கலாகும் அத்தகைய விரிவுரைகளை மற்றும் கட்டளைகளை வழங்குவதற்கும் மேலும் கல்லூரிகளின் மாணவர்களாக இல்லாத நபர்களுக்கு விரிவுரை மற்றும் அவர்களுக்குப் பட்டயங்கள் வழங்கவும் வகை செய்தல்;

(fd) ஒப்புதலளிக்கப்பட்ட கல்லூரிகளாக கல்லூரிகளை அங்கீகரித்தல் ;

(fe) கல்லூரி எதனையும் அரசின் இசைவுடன் தன்னாட்சிக் கல்லூரியாகப் பெயரிட்டுக் குறிப்பிடுதல் மற்றும் அத்தகைய பெயர்க் குறிப்பிடலை நீக்குதல் ;

(ff) இணைக்கப்பட்ட மற்றும் ஒப்புதலளிக்கப்பட்ட கல்லூரிகள், மாணவர் விடுதிகள் அனைத்தையும் ஆய்வு செய்வதற்கு ஏற்பாடு செய்தலும் ஆய்வு செய்யப்பணித்தலும்;'';

(2) (i) கூறில், (i) இனத்தில், ''பல்கலைக்கழகம்'' என்ற சொற்றொடருக்குப் பின்பு, ''அல்லது ஆய்வகம் அல்லது ஓர் இணைக்கப்பெற்ற கல்லூரி அல்லது ஓர் ஒப்புதல் அளிக்கப்பெற்ற கல்லூரி'' என்னும் சொற்றொடரானது உட்புகுத்தப்படுதல் வேண்டும்;

(3) (m) கூறில் ''விதிக்கப்பட்ட'' என்ற சொற்றொடருக்குப் பின்பு ''கல்லூரிகளின் ஒப்புதல் மற்றும் இணைக்கப்படுதலுக்காக'' என்ற சொற்றொடரானது உட்புகுத்தப்படுதல் வேண்டும்;

(4) (z) கூறில் ''பல்கலைக்கழகத்தின்'' என்ற சொற்றொடருக்காக, ''பல்கலைக்கழகம், இணைக்கப்பெற்ற கல்லூரிகள், ஒப்புதல் அளிக்கப்பெற்ற கல்லூரிகள் மற்றும் விடுதிகளில்'' என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

9. 2013 ஆம் ஆண்டுச் சட்டத்தின் 22 ஆம் பிரிவிற்காக, பின் வரும் பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது: — 22 ஆம் பிரிவிற்கான மாற்றீடு.

''22. **கல்வி மன்றம்.** — (1) கல்வி மன்றமானது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும், அதாவது :—

**வகை—I பதவிவழி உறுப்பினர்கள்.**

(a) துணைவேந்தர்;

(b) புலங்களின் தலைவர்கள்;

(c) பல்கலைக்கழக நூலகர்; மற்றும்

(d) பல்கலைக்கழக உடற்கல்வி இயக்குநர்.

**வகை—II பிற உறுப்பினர்கள்.**

(a) துணைவேந்தரின் பரிந்துரையின்பேரில் சுழற்சி முறையில் வேந்தரால் நியமிக்கப்பட வேண்டிய அரசுக் கல்லூரிகளின் முதல்வர்களுள் ஐவர்;

(b) துணைவேந்தரின் பரிந்துரையின் பேரில் வேந்தரால் நியமிக்கப்படும் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் பிற ஆசிரியர்களுக்கிடையே பதினைந்து உறுப்பினர்கள்;

(c) ஒற்றை மாற்று வாக்கு முறை வாயிலான விகிதாசாரப் பிரதிநிதித்துவ அமைப்பிற்கிணங்க இணைக்கப்பட்ட கல்லூரிகளின் முதல்வர்கள் அவர்களுக்கிடையே இருந்து தேர்ந்தெடுத்த பத்து நபர்களுக்கு மிகாமல்;

(d) ஒற்றை மாற்று வாக்கு முறை வாயிலான விகிதாசாரப் பிரதிநிதித்துவ அமைப்பிற்கிணங்க, இணைக்கப்பட்ட கல்லூரிகளின் முதல்வர்களைத் தவிர பிற இணைக்கப்பட்ட மற்றும் ஒப்புதல் அளிக்கப்பட்ட கல்லூரிகளின் ஆசிரியர்கள் அவர்களுக்கிடைய இருந்து, தேர்ந்தெடுத்த ஆசிரியர்களுள் பத்து நபர்களுக்கு மிகாமல்;

(e) துணைவேந்தரால் சுழற்சி முறையில் நியமிக்கப்பட வேண்டிய பாடக்குழுவின் தலைவர்களுள் பத்து நபர்களுக்கு மிகாமல்;

(f) வேந்தரால் நியமிக்கப்பட வேண்டிய ஐந்து நபர்கள்;

(g) இணைவேந்தரால் நியமிக்கப்பட வேண்டிய ஐந்து நபர்கள்;

(h) பல்கலைக்கழக பரப்பிடத்திற்குள்ளான தொகுதி எதனின் சார்பாளராயிருக்கும் அதன் உறுப்பினர்களுக்கிடையே இருந்து தேர்ந்தெடுக்கப்படும் சட்டமன்றத்தின் இரண்டு உறுப்பினர்கள்;

(i) ஒற்றை மாற்று வாக்குமுறை வாயிலாக விகிதாசார பிரதிநிதித்துவ அமைப்பிற்கிணங்க தனியார் கல்லூரிகளின் செயலாளர்கள் அவர்களுக்கிடையே தேர்ந்தெடுக்கப்படும் இருவர் ;

(j) இணைவேந்தரால் நியமிக்கப்பட வேண்டிய பல்கலைக்கழகப் பரப்பிடத்திற்குள்ளான உள்ளாட்சி அமைப்பின் உறுப்பினர்களுள் இருவர் ;

(k) அரசின் பரிந்துரையின் பேரில் வேந்தரால் நியமிக்கப்பட வேண்டிய தனியார் தொழிலகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களிலிருந்து நான்கு உறுப்பினர்கள்;

(l) அரசின் பரிந்துரையின் பேரில் வேந்தரால் நியமிக்கப்பட வேண்டிய தொழில்சார் சங்கங்கள் அல்லது நிறுவனங்கள் அல்லது அமைப்புகள் அல்லது கழகங்களில் இருந்து நான்கு நபர்கள்;

(m) துணைவேந்தரின் பரிந்துரையின் பேரில் இணைவேந்தரால் நியமிக்கப்படும் முன்னாள் மாணவர்களுள் இருவர்; மற்றும்

(n) வேறெந்தவாறும் கல்விக்குழுவின் உறுப்பினரல்லாத ஆட்சிக்குழு உறுப்பினர்கள்:

வரம்புரையாக**,** வேந்தரால் செய்யப்படும் நியமனமானது சமுக நீதியின் தேவைகள் மற்றும் பிரதிநிதியற்று எஞ்சியுள்ள பகுதிகளையும் கருத்தில் கொண்டிருக்கலாம்**.**

(2) (i) **(1)** ஆம் உட்பிரிவில் ‘வகை II பிற உறுப்பினர்கள்’ என்பதன் கீழ் (n) கூறின் பொருட்டு கல்வி மன்றத்தின் உறுப்பினராக உள்ள உயர்கல்வித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளரோ அல்லது சட்டத்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளரோ, எந்தவொரு காரணத்திற்காகவும் கல்வி மன்றத்தின் கூட்டங்களில் கலந்து கொள்ள இயலாது இருக்கும் நேர்வில் அவர் அரசு துணைச் செயலாளரின் படிநிலைக்குக் குறையாத அலுவலர் எவரையும் கூட்டங்களில் கலந்துகொள்ள அனுப்பி வைக்கலாம்;

(ii) **(1)** ஆம் உட்பிரிவில் ‘வகை II பிற உறுப்பினர்கள்’ என்பதன் கீழ் (n) கூறின் பொருட்டு, கல்வி மன்றத்தின் உறுப்பினராக உள்ள கல்லூரிக் கல்வி இயக்குநர் அல்லது தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் எந்தவொரு காரணத்திற்காகவும், கல்வி மன்றத்தின் கூட்டங்களில் கலந்து கொள்ள இயலாது இருக்கும் நேர்வில், அவர் துணை இயக்குநர் படிநிலைக்குக் குறையாத துறை அலுவலர் எவரையும் கூட்டங்களில் கலந்துகொள்ள அனுப்பி வைக்கலாம்**.**

(3) (i) பிறவாறு வகைசெய்யப்பட்டிருந்தால் தவிர, தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்ட கல்வி மன்றத்தின் உறுப்பினர், மூன்றாண்டுக்கால அளவு ஒன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும் மற்றும் அத்தகைய உறுப்பினர் மற்றுமொரு மூன்றாண்டுகள் கால அளவிற்கு தேர்ந்தெடுக்க அல்லது நியமிக்கப்படுவதற்கு உரிமைத் தகுதியுடையவராகுதல் வேண்டும்.

(ii) உறுப்பினர் ஒருவர் கல்விமன்றத்தின் தற்செயல் காலியிடத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டு அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்டிருக்குமிடத்து, அத்தகைய உறுப்பினர் எவராலும் ஓராண்டுக்கு குறையாமல் வகித்து வரப்பட்ட பதவிக்கால அளவானது, ஒரு முழுமையான மூன்று ஆண்டுகளைக் கொண்ட கால அளவாகக் கருதப்படுதல் வேண்டும் :

வரம்புரையாக, குறிப்பிட்ட வாக்காளர் தொகுதியில் அல்லது அமைப்பில் உறுப்பினர் அல்லது ஒரு குறிப்பிட்ட, நியமனப் பதவியை வகிக்கிறார் என்ற தகுதியினைக் கல்விமன்றத்திற்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்டிருக்கும் ஒரு உறுப்பினரானவர், அந்தக் குறிப்பிட்ட வாக்காளர் தொகுதியில் அல்லது அமைப்பில் அல்லது நேர்வுக்கேற்ப அந்த நியமனப் பதவியில் உறுப்பினராக இருப்பது அற்றுப்போகும் தேதியிலிருந்து கல்வி மன்றத்தின் உறுப்பினராக இருப்பதும் அற்றுப்போதல் வேண்டும் :

மேலும் வரம்புரையாக, கல்வி மன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், எந்தப் பதவியின் காரணமாக கல்விமன்றத்தின் பதவி வழி உறுப்பினராக இருப்பதற்கு அவர் உரிமைத் தகுதியுடையவராக இருக்கிறாரோ அந்தப் பதவிகள் எதற்கேனும் தற்காலிகமாக நியமிக்கப்படுகிறவிடத்து, அவர்தாம் நியமன பொறுப்பை எடுத்துக் கொள்கிற தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள்ளாக தாம் தேர்ந்து எடுக்கப்பட்டதன் அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்டதன் காரணமாக, கல்விமன்றத்தின் உறுப்பினராகத் தாம் தொடர்ந்து இருப்பதற்கு விரும்புகிறாரா அல்லது அத்தகைய உறுப்பினராக இருக்கும் பதவியை விட்டு நீங்கி தம்முடைய நியமனத்தின் காரணமாகப் பதவி வழி உறுப்பினராவதற்கு விரும்புகிறாரா என்பதைத் தம்மால் கையொப்பமிடபட்டு துணைவேந்தருக்கு தெரிவிக்கப்பட்ட எழுத்துருவிலான அறிவிப்பின் மூலமாக தேர்வு செய்தல் வேண்டும் மற்றும் அத்தகைய விருப்பத்தெரிவானது, அறுதியானதாக இருத்தல் வேண்டும். அந்த விருப்பத்தெரிவைச் செய்யத் தவறுவதன் பேரில், தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினராக உள்ள தம்முடைய பதவியை விட்டு அவர் நீங்கியிருப்பதாகக் கொள்ளப் பெறுவார்.

(4) நபரொருவர் கல்வி மன்றத்தின் உறுப்பினராக இருப்பது அற்றுபோகும் போது, அவர் கல்விமன்றத்தில் தமக்கிருந்த உறுப்பினர் பதவியின் காரணத்தால் இப்பல்கலைக்கழக அதிகார அமைப்புகள் எவற்றிலும் உறுப்பினராக அவர் இருப்பதும் அற்றுபோதல் வேண்டும்.

(5) கல்விமன்றத்தின் உறுப்பினர்கள் வகுத்துரைக்கப்படலாகிற தினப்படிகள் மற்றும் பயணப்படிகள் தவிர, இப்பல்கலைகழகத்திலிருந்து ஊதியம் எதனையும் பெறுவதற்கு உரிமையுடையவர்கள் ஆகார்:

வரம்புரையாக, இந்த உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும், உறுப்பினர் எவரும் தாம் வகிக்கிற பதவியின் காரணமாக தாம் உரிமைத் தகுதியுடையவராயிருக்கும் தன்னுடைய இயல்பான ஊதியங்களைப் பெறுவதைத் தடைசெய்தல் கூடாது.

(6) பதவி வழி உறுப்பினர் அல்லாத கல்விமன்றத்தின் ஓர் உறுப்பினர், தமது பதவிக்காலம் முடிவதற்கு முன்பு எந்த நேரத்திலும், தமது உறுப்பினர் பதவியிலிருந்ததற்கான பதவி விலகலைக் கொடுக்கலாம். அத்தகைய பதவி விலகலானது, அவ்வுறுப்பினரால் எழுத்துருவிலான கடிதமொன்றின் வாயிலாக வேந்தருக்குத் தெரிவிக்கப்படுதல் வேண்டும் மற்றும் அப்பதவி விலகலானது, வேந்தரால் அது ஏற்கப்படும் தேதியிலிருந்து செயல் விளைவு பெறுதல் வேண்டும்.''.

23 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

10. 2013 ஆம் ஆண்டுச் சட்டத்தின் 23 ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவில், (c) கூறில், இனம் (i)– ல், ''பல்கலைக்கழகம்'' என்ற சொற்றொடருக்குப் பின்பு, ''மற்றும் அதன் ஒப்புதல் அளிக்கப்பெற்ற அல்லது இணைக்கப்பட்ட கல்லூரிகள்'' என்ற சொற்றொடரானது உட்புகுத்தப்படுதல் வேண்டும்.

25 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

11. 2013 ஆம் ஆண்டுச் சட்டத்தின் 25 ஆம் பிரிவில்,—

(1) (1) ஆம் உட்பிரிவில், (d) கூறானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(2) (2) ஆம் உட்பிரிவில், ''அல்லது மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையை பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்'' என்ற சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

29 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

12. 2013 ஆம் ஆண்டுச் சட்டத்தின் 29 ஆம் பிரிவில், (o) கூறுக்குப் பின்பு, பின்வரும் கூறுகளானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது :—

''(oa) ஒப்புதலளிக்கப்பட்ட கல்லூரிகளுக்கு ஏற்பிசைவு அளிப்பதற்கான மற்றும் இப்பல்கலைக்கழகத்தோடு கல்லூரிகளை இணைப்பதற்கான வரைக்கட்டுகள்;

(ob) கல்லூரியொன்று தன்னாட்சிக் கல்லூரியாக பெயர் குறித்து அழைக்கப்படுதலோ அல்லது அத்தகைய கல்லூரியை அவ்வாறு பெயர் குறித்து அழைக்கப்படுதலை நீக்குதலோ எந்த முறையில் மற்றும் எந்த வரைக்கட்டுக்களுக்கு உட்பட்டும் செய்யப்பட வேண்டும் என்பதும் மற்றும் கல்விக்குழு மற்றும் பாடக்குழுக்கள் ஆகியவற்றை அமைத்துருவாக்குதல் அல்லது மாற்றி அமைத்துருவாக்குதல், அவற்றின் அதிகாரங்கள், பணிகள் ஆகியவை உள்ளடங்கலான தன்னாட்சிக் கல்லூரிகளை நிருவகித்தல் தொடர்பான பொருட்பாடுகள் ;''.

31 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

13. 2013 ஆம் ஆண்டுச் சட்டத்தில், 31 ஆம் பிரிவில், (a) கூறுக்காக, பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :—

''(a) பல்கலைக்கழகம், இணைக்கப்பட்ட கல்லூரிகள், ஒப்புதலளிக்கப்பட்ட கல்லூரிகள் மற்றும் ஆய்வகங்களுக்கு மாணவர்களின் சேர்க்கை; ''.

36 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

14. 2013 ஆம் ஆண்டுச் சட்டத்தின் 36 ஆம் பிரிவில் ''பல்கலைக்கழகமொன்றின் உறுப்பினர்'' என்ற சொற்றொடருக்காக ''பல்கலைக்கழகம் அல்லது ஓர் இணைக்கப்பட்ட கல்லூரி அல்லது ஓர் ஒப்புதலளிக்கப்பட்ட கல்லூரியொன்றின் உறுப்பினர்'' என்னும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

புதியப் பிரிவினை உட்புகுத்துதல்.

15. 2013 ஆம் ஆண்டுச் சட்டத்தின், 52 ஆம் பிரிவிற்கு பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது: —

52–A. குறித்த சில சட்டங்கள் பொருந்தாதிருத்தல். — (1) (2) முதல் (8) ஆம் உட்பிரிவுகளின் வகைமுறைகளுக்குட்பட்டு, 1981 ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 2/1982) மற்றும் 2021 ஆம் ஆண்டு டாக்டர் ஜெ ஜெயலலிதா பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 5/2021) ஆகிய சட்டங்களானவை, (இதன்பின்பு ''2021 ஆம் ஆண்டு சட்டமென'' வழங்கப்படுவதான) 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்தம் மற்றும் நீக்கறவு) சட்டமானது தொடங்கப்பட்ட தேதியிலிருந்தும் அது முதற்கொண்டும், இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் பொருந்துகிற பரப்பிடங்களைப் பொறுத்த அளவில், பொருந்துவது அற்றுப் போதல் வேண்டும்.

(2) அவ்வாறு அற்றுப் போவதானது,—

(a) (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட பரப்பிடங்களைப் பொறுத்த அளவில், (இதன் பின்பு ''கூறப்பட்டச் சட்டங்கள்'' என குறிப்பிடப்படுவதான) 1981 ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 2/1982) மற்றும் 2021 ஆம் ஆண்டு டாக்டர் ஜெ ஜெயலலிதா பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 5/2021) ஆகிய சட்டங்களின் முந்தைய செயற்பாட்டையோ;

(b) கூறப்பட்ட சட்டங்களுக்கு எதிராக செய்யப்பட்ட குற்றம் எதனையும் பொறுத்து ஏற்க நேரிட்ட தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை எதுவும்; அல்லது

(c) அத்தகைய தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை தொடர்பான புலனாய்வு, சட்ட நடவடிக்கைகள் அல்லது தீர்வழி எதனையும் பாதித்தல் ஆகாது மற்றும் அத்தகைய புலனாய்வு, சட்ட நடவடிக்கை அல்லது தீர்வழி எதுவும் தொடங்கப்படலாம், தொடர்ந்து நடத்தப்படலாம் அல்லது நிறைவேற்றப்படலாம் மற்றும் 2021 ஆம் ஆண்டுச் சட்டமானது நிறைவேற்றப்படாதது போன்று அத்தகைய தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை எதுவும் விதிக்கப்படலாம்.

(3) (1) ஆம் உட்பிரிவில் என்ன அடங்கியிருந்த போதிலும், கூறப்பட்ட சட்டங்களின் படி செய்யப்பட்ட மற்றும் 2021 ஆம் ஆண்டுச் சட்டமானது தொடங்கப்பட்ட தேதியில் நடைமுறையிலுள்ள நிலைவிதிகள், துணை முறைவிதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகள் அனைத்தும், இந்தச் சட்டத்துடன் முரணாக இல்லாத வரையில், இந்தச் சட்டத்தின் படி செய்யலாகும் நிலைவிதிகள், துணை முறைவிதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளினால் மாற்றியமைக்கப்படும் வரை பல்கலைக்கழகப் பரப்பிடத்தில் தொடர்ந்து நடைமுறையில் இருந்து வருதல் வேண்டும்.

(4) (3) ஆம் உட்பிரிவின் படி தொடர்ந்து நடைமுறையில் இருந்து வரும் அல்லது இச்சட்டத்தின் படி செய்யப்பட்டவாறான நிலைவிதிகள், துணைமுறை விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளில் உள்ளடங்கிய எது எவ்வாறிருப்பினும், 2021 ஆம் ஆண்டுச் சட்டம் தொடங்கப்படுவதற்கு முன், நேர்விற்கேற்ப பாரதிதாசன் பல்கலைக்கழகம் அல்லது டாக்டர் ஜெ ஜெயலலிதா பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட அல்லது அதனால் ஒப்புதலளிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பரப்பிடத்திற்குள்ளான ஒரு கல்லூரியின் மாணவரான, முறையே பாரதிதாசன் பல்கலைக்கழகம் அல்லது திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தின் தேர்வுகள் எதிலும் தோன்றும் தகுதியுடையவரான நபர் ஒவ்வொருவரும், நேர்விற்கேற்ப, பாரதிதாசன் பல்கலைக்கழகம் அல்லது திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தில் தனது படிப்பு காலத்தினை நிறைவு செய்ய அனுமதிக்கப்படுதல் வேண்டும் மற்றும் நேர்விற்கேற்ப பாரதிதாசன் பல்கலைக்கழகம் அல்லது திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தில் குறித்தகாலப் படிப்பிற்கிணங்க அண்ணாமலை பல்கலைக்கழகத்தினால் தீர்மானிக்கப் படலாகும் அத்தகைய மாணவர்களுக்கு, அத்தகைய கால அளவிற்கு மற்றும் அத்தகைய முறையில் பயிற்றுவித்தல், கற்பித்தல் மற்றும் பயிற்சிக்கான ஏற்பாடுகளை அண்ணாமலை பல்கலைக்கழகமானது செய்தல் வேண்டும், மற்றும் நேர்விற்கேற்ப பாரதிதாசன் பல்கலைக்கழகம் அல்லது திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தினால், அத்தகைய காலத்தில் வைக்கப்படும் அல்லது நடத்தப்படும் தேர்வுகளுக்கு அனுமதிக்கப்படும் அத்தகைய மாணவர்கள், மற்றும் நேர்விற்கேற்ப பாரதிதாசன் பல்கலைக்கழகம் அல்லது திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தின் தொடர்புடைய பட்டம், பட்டயம் அல்லது பிற கல்விச் சிறப்புகளானவை, அத்தகைய தேர்வுகளின் முடிவில் தகுதி பெற்ற மாணவர்களுக்கு, முறையே, பாரதிதாசன் பல்கலைக்கழகம் அல்லது திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தினால் அளிக்கப்படுதல் வேண்டும்.

(5) 2021 ஆம் ஆண்டுச் சட்டத்தின் தொடக்கத்திற்கு முன்னர், பல்கலைக்கழகப் பரப்பிடத்திற்குள்ளான கல்லூரிகள் அனைத்தும்,—

(a) நேர்விற்கேற்ப பாரதிதாசன் பல்கலைக்கழகம் மற்றும் அல்லது திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தினால் இணைக்கப்பட்ட அல்லது ஏற்பளிக்கப்பட்டவையாக தொடர்ந்து இருத்தல் வேண்டும்; மற்றும்

(b) நேர்விற்கேற்ப பாரதிதாசன் பல்கலைக்கழகம் அல்லது திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தின் பட்டங்களுக்கான தேர்வுகளுக்கு அனுமதியளிப்பதற்காக குறித்தகால படிப்பிற்கு வகை செய்கின்றவையுமான இச்சட்டத்தின் படி அண்ணாமலை பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட கல்லூரிகளாக கருதப்படுதல் வேண்டும் மற்றும் இச் சட்டத்தின் வகைமுறைகள், இயலும் வரையில், அதற்கிணங்கியவாறு பொருந்துதல் வேண்டும்.

(6) 2021 ஆம் ஆண்டுச் சட்டத்தின் தொடக்கத்திற்கு முன்னர், நேர்விற்கேற்ப பாரதிதாசன் பல்கலைக்கழகம் அல்லது திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தினால், சிறப்புப்பட்டங்கள் மற்றும் பட்டயங்களுக்காக கூறப்பட்ட பல்கலைக்கழகத்தின் தேர்வுகளுக்கு அனுமதித்தலுக்காக குறித்தகால படிப்புகளை வழங்கும் கல்லூரிகளாக, பல்கலைக்கழகப் பரப்பிடத்திற்குள்ளிருக்கும் கல்லூரிகள் அனைத்தும் தொடர்ந்து ஏற்பளிக்கப்பட்டு இச்சட்டத்தின் படி அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தினால் ஒப்புதலளிக்கப் பெற்ற கல்லூரிகளாகக் கருதப்படுதல் வேண்டும் மற்றும் இச்சட்டத்தின் வகைமுறைகள், இயலும் வரையில், அதற்கிணங்க பொருந்துதல் வேண்டும்.

(7) 2021ஆம் ஆண்டுச் சட்டத்தின் தொடக்கத்திற்கு முன்னர், நேர்விற்கேற்ப பாரதிதாசன் பல்கலைக்கழகம் அல்லது திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தினால் ஏற்பளிப்பினை தொடர்ந்து வழங்கப்பட்ட பல்கலைக்கழகப் பரப்பிடங்களுக்குள் இருக்கும் விடுதிகள் அனைத்தும், இச்சட்டத்தின் படி அண்ணாமலை பல்கலைக்கழகத்தினால் ஏற்பளிக்கப்பட்ட விடுதிகளாக கருதப்படுதல் வேண்டும்; மற்றும் இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எந்த அளவுக்கு இயலுமோ அந்த அளவுக்கு அதன்படியே பொருந்துதல் வேண்டும்.

(8) (2) ஆம் உட்பிரிவின் வகைமுறைகளுக்குட்பட்டு, ஆனால் (3) முதல் (7) ஆம் உட்பிரிவுகளின் வகைமுறைகளுக்கு ஊறில்லாமல், 2021 ஆம் ஆண்டுச் சட்டத்தின் தொடக்கத்திற்கு முன்னர், கூறப்பட்ட சட்டங்களின் வகைமுறைகளானவை அளாவி நிற்கும் பரப்பிடங்கள் எதற்கும் தொடர்டைய, கூறப்பட்ட சட்டங்களின் வகைமுறைகள் எதன் படியும் செய்யப்பட்ட எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், இச்சட்டத்தின் தொடர்புடைய வகைமுறைகளின் படி செய்யப்பட்ட செயல் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கையெனக் கருதப்படுதல் வேண்டும் மற்றும் இச்சட்டத்தின் தொடர்புடைய வகைமுறைகளின் படி செய்யப்பட்ட செயல் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கையினால் ஒதுக்கிவைக்கப்பட்டாலன்றி மற்றும் அதுவரையில் அதற்கிணங்கியவாறு செயல்விளைவு கொண்டிருத்தல் வேண்டும்.

இணைப்புப் பட்டியலைச் சேர்த்தல்.

16. 2013 ஆம் ஆண்டுச் சட்டத்தின் 58 ஆம் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் இணைப்புப் பட்டியலானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:–

**இணைப்புப் பட்டியல்.**

**[2 (ca) மற்றும் 2 (fb) பிரிவுகளைக் காண்க]**

1. பெரியார் கலைக் கல்லூரி, கடலூர்.
2. அரசு கலைக் கல்லூரி, சிதம்பரம்.
3. திருக்கொளஞ்சியப்பர் அரசு கலைக் கலைக் கல்லூரி, விருதாச்சலம்.
4. அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, விழுப்புரம்.
5. தர்மாபுரம் ஞானாம்பிகை அரசு மகளிர் கலைக் கல்லூரி, மயிலாடுதுறை.
6. திரு. ஆ.கோவிந்தசாமி அரசுக் கலைக் கல்லூரி, திண்டிவனம்.

**பகுதி – III.**

**1981 ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.**

1 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

17. 1981 ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக் கழகச் சட்டத்தில்,— தமிழ்நாடு சட்டம் 2/1982

(1) 1 ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவுக்காக, பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :—

“(2) அரியலூர், கரூர், நாகப்பட்டினம், பெரம்பலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் திருவாரூர் மாவட்டங்களை உள்ளடங்கிய பரப்பிடத்திற்கு அளாவிநிற்கும்.”.

(2) இணைப்புப் பட்டியலில், “9. தர்மாபுரம் ஞானாம்பிகை அரசு மகளிர் கலைக் கல்லூரி, மயிலாடுதுறை” என்ற உள்ளீடானது விட்டுவிடப் படுதல் வேண்டும். இணைப்புப் பட்டியலுக்கான திருத்தம்.

## பகுதி – IV.

## 2021 ஆம் ஆண்டு டாக்டர். ஜெ ஜெயலலிதா பல்கலைக்கழகச் சட்டத்தின் நீக்கறவு.

தமிழ்நாடு சட்டம் 5/2021. 18. (1) 2021 ஆம் ஆண்டு டாக்டர். ஜெ ஜெயலலிதா பல்கலைக்கழகச் சட்டம் ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்படுகிறது. 2021 ஆம் ஆண்டு டாக்டர். ஜெ ஜெயலலிதா பல்கலைக்கழகச் சட்டத்தின் நீக்கறவு.

(2) 2021 ஆம் ஆண்டுச் சட்டத்தின் தொடக்கத் தேதிக்கு முன்னர் அத்தகைய பதவியிலிருக்கும் டாக்டர்.ஜெ ஜெயலலிதா பல்கலைக் கழகத்தின் துணை வேந்தரானவர், அத்தகைய தொடக்கத் தேதியிலிருந்தும் அது முதற்கொண்டும், அத்தகைய துணைவேந்தரானவர் பதவியிலிருந்து அற்றுபோதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. கோபி ரவிகுமார்,**
*அரசு செயலாளர் (சட்டமியற்றல்),*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**வெ. அரசகுமார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (தமிழ்ப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது 2021 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13 ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:—

சட்ட எண் 33/2021

**2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**1.** (1) இந்தச் சட்டம், 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) இரண்டாம் திருத்தச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) (a) 2,4,5,6,7 மற்றும் 8—ஆம் பிரிவுகளானது, 2021—ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26—ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(b) 3—ஆம் பிரிவானது, 2021—ஆம் ஆண்டு ஜுன் மாதம் 7—ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 14/2016.

குறித்த சில சொற்றொடருக்கான குறிப்பீடுகள் சில சொற்கள்மூலம் மாற்றியமைத்தல்.

**2.** (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 2016—ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டத்தில், பிறவாறு வெளிப்படையாக வகை செய்யப்பட்டிருந்தாலன்றி, "மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் மற்றும் சீர் மரபினர்கள்," மற்றும் "மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினர்," எனும் சொற்றொடர்களுக்காக, இதில் உள்ள சொற்கள் எந்த வரிசையில் இருந்தாலும் மற்றும் "அல்லது" அல்லது "மற்றும்" அல்லது "/" என்ற சொற்களுடன் சேர்ந்திருந்தாலும், அவை வருகின்ற இடங்களிலெல்லாம், "மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள்(வ), மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் மற்றும் சீர்மரபினர்கள் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

67—ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

**3.** முதன்மைச் சட்டத்தின் 67ஆம் பிரிவில்.

(i) (1)—ஆம் உட்பிரிவில், "பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை" எனும் சொற்றொடருக்காக, "மனிதவள மேலாண்மைத்துறை" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(ii) (3)—ஆம் உட்பிரிவில், "பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தம்" எனும் சொற்றொடருக்காக, "மனிதவள மேலாண்மை" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

I — ஆம் இணைப்புப் பட்டியலுக்கானத் திருத்தம்.

**4.** முதன்மைச் சட்டத்தின் I—ஆம் இணைப்புப் பட்டியலில், "பகுதி— இ" மற்றும் "பகுதி— ஈ" —க்காக பின்வருவன மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

**பகுதி-இ.**

**மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள்(வ)**

வன்னியகுல சத்திரியா (வன்னியர், வன்னியா, வன்னிய கவுண்டர், கவுண்டர் அல்லது கண்டர், படையாச்சி, பள்ளி மற்றும் அக்னிகுல சத்திரியா உட்பட)

**பகுதி — ஈ.**

**மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் மற்றும் சீர்மரபினர்கள்**

**(A) மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள்**

1. அம்பலக்காரர்
2. அரயர் ( கன்னியாகுமரி மாவட்டம் )
3. பெஸ்தா, சிவியர்
4. பட்ராஜு (சத்திரிய ராஜுக்கள் நீங்கலாக)
5. போயர், ஒட்டர்
6. தாசரி

7. டொம்மாரா
8. ஜாம்புவனோடை
9. ஜோகி
10. கொரச்சா
11. இலத்தின் கத்தோலிக்க கிறித்தவ வண்ணார் (கன்னியாகுமரி மாவட்டம்)
12. மோண்ட கொல்லா
13. முட்லகம்பட்டி
14. நோக்கர்
15. பரவர் (இவ்வகுப்பு ஆதிதிராவிடர் வகுப்பாக அறிவிக்கப்பட்டுள்ள கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் தென்காசி மாவட்டம் செங்கோட்டை வட்டம் நீங்கலாக)
16. பரவர் வகுப்பில் இருந்து கிறித்தவ மதத்திற்கு மாறியவர்கள் – கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் தென்காசி மாவட்டத்தில் செங்கோட்டை வட்டத்தை சார்ந்த பரவர் வகுப்பில் இருந்து கிறித்தவ மதத்திற்கு மாறியவர்கள் உட்பட.
17. மீனவர் (பர்வதராஜகுலம், பட்டணவர், செம்படவர்) (கிறித்தவ மதத்திற்கு மாறியவர்கள் உட்பட)
18. முக்குவர் அல்லது முகையர் (கிறித்தவ மதத்திற்கு மாறியவர்கள் உட்பட)
19. புண்ணான் வேட்டுவ கவுண்டர்
20. தெலுகுபட்டி செட்டி
21. தொட்டிய நாயக்கர் (ராஜகம்பளம், கொல்லவார், சில்லவார், தொக்கலவார் தொழுவநாயக்கர் மற்றும் எர்ரகொல்லர் உட்பட)
22. வலையர் (செட்டிநாடு வலையர்கள் உட்பட)
23. வண்ணார் (சலவைத் தொழிலாளர்) (அகஸா, மடிவலா, ஏகாலி, ராஜகுலா, வெலுத்தாடர் மற்றும் ராஜாகா உட்பட) (இவ்வகுப்பு ஆதிதிராவிடர் வகுப்பாக அறிவிக்கப்பட்டுள்ள கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் தென்காசி மாவட்டம் செங்கோட்டை வட்டம் நீங்கலாக)
24. வேட்டைக்காரர்
25. வேட்டுவகவுண்டர்

**(B) சீர்மரபினர்கள்**

1. ஆத்தூர் கீழ்நாடு கொறவர் (சேலம், நாமக்கல், கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்டங்கள்)
2. ஆத்தூர் மேல்நாடு கொறவர் (சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்)
3. ஆப்பநாடு கொண்டையம் கோட்டை மறவர் (சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்கள்)
4. அம்பலக்காரர் (தஞ்சாவூர், நாகப்பட்டிணம், மயிலாடுதுறை, திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்)
5. அம்பலக்காரர் (சூரியனூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்)
6. போயாஸ் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை, நீலகிரி, சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள்)
7. பட்டு துர்கா
8. சி.கே. கொறவர் (கடலூர் மற்றும் விழுப்புரம், கள்ளக்குறிச்சி மாவட்டங்கள்)
9. சக்காளர் (சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர், மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் நீலகிரி மாவட்டங்கள்)

10. செங்கயம்புடி கொறவர் (திருப்பத்தூர், இராணிபேட்டை, வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்)

11. செட்டிநாடு வலையர் (சிவகங்கை, விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள்)

12. டோம்ஸ் (புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கரூர் மற்றும் பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்கள்)

13. தொப்ப கொறவர் (சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்)

14. டொம்மார்ஸ் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், புதுக்கோட்டை, திருப்பத்தூர், இராணிபேட்டை, வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்)

15. தொங்க போயா

16. தொங்க ஊர் கொரச்சாஸ்

17. தேவகுடி தலையாரி

18. தொப்பை கொரச்சாஸ் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்)

19. தாபி கொறவர் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை, திருப்பத்தூர், இராணிபேட்டை, வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்)

20. தொங்க தாசரி (செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை, சென்னை, சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்)

21. கொரல்லா தொட்ட போயா

22. குடு தாசரி

23. கந்தர்வ கோட்டை கொறவர் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, கடலூர் மற்றும் விழுப்புரம், அரியலூர் மாவட்டங்கள்)

24. கந்தர்வ கோட்டை கள்ளர் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்)

25. இஞ்சி கொறவர் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் அரியலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்)

26. ஜோகி (செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், சென்னை, கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், இராணிப்பேட்டை, வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்)

27. ஜாம்பவனோடை

28. காலாடி (சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், மதுரை, தேனி, திண்டுக்கல், தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கரூர் மற்றும் பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்கள்)

29. கல்ஒட்டர் (செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், மதுரை, தேனி, திண்டுக்கல், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்)

30. கொறவர் (செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, சென்னை , மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் நீலகிரி மாவட்டங்கள்)

31. களிஞ்சி தாபி கொறவர் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்)

32. கூட்டப்பால் கள்ளர் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்)

33. காலா கொறவர் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்)

34. கலவதில போயாஸ்

35. கேப்மாறி (செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கரூர் மற்றும் பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்கள்)

36. மறவர்கள் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், திருநெல்வேலி, தென்காசி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்கள்)

37. மொண்ட கொறவர்

38. மொண்டகொல்லா (சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்)

39. முட்லகம்பட்டி (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்)

40. நோக்கர் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்)

41. நெல்லூர்பேட்டை ஒட்டர் (திருப்பத்தூர், இராணிப்பேட்டை, வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள் )

42. ஒட்டர் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை, மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்கள்)

43. பெத்தபோயர் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்)

44. பொன்னை கொறவர் (திருப்பத்தூர், இராணிப்பேட்டை, வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்)

45. பிரமலைக்கள்ளர் (சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், மதுரை, தேனி, திண்டுக்கல், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மற்றும் திருவாரூர் மாவட்டங்கள்)

46. பெரியசூரியூர் கள்ளர் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள் )

47. படையாச்சி (கடலூர் மாவட்டத்தில் வெள்ளையன் குப்பம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தென்னூர்)

48. புண்ணாண்வேட்டுவகவுண்டர் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்)

49. சேர்வை (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்)

50. சேலம் மேல்நாடுகொறவர் (மதுரை, தேனி, திண்டுக்கல், கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர், சேலம், நாமக்கல், திருப்பத்தூர், இராணிப்பேட்டை, வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்)

51. சேலம் உப்பு கொறவர் ( சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்)

52. சக்கரதாமடை கொறவர் (திருப்பத்தூர், இராணிப்பேட்டை, வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்)

53. சாரங்கபள்ளி கொறவர்

54. சூரமாறி ஒட்டர் (சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்)

55. செம்பநாடு மறவர் ( சிவகங்கை, விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள்)

56. தள்ளிகொறவர் (சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்)

57. தெலுங்கப்பட்டி செட்டி (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்)

58. தொட்டியநாயக்கர் (சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை, திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, சேலம், நாமக்கல், திருப்பத்தூர், இராணிபேட்டை, வேலூர், திருவண்ணாமலை, கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்கள்)

59. தோகமலைகொறவர்கள் அல்லது கேப்மாறி (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்)

60. உப்புகொறவர் அல்லது செட்டிபல்லிகொறவர் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், புதுக்கோட்டை, மதுரை, தேனி, திண்டுக்கல், திருப்பத்தூர், இராணிப்பேட்டை, வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்)

61. ஊராளிகவுண்டர் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்)

62. வயல்பாடு அல்லது நாவல்பேட்டா கொரச்சாஸ்

63. வடுவார்பட்டி கொறவர் (மதுரை, தேனி, திண்டுக்கல், இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்

64. வலையர் (மதுரை, தேனி, திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை, ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் , திருப்பூர் மாவட்டங்கள்)

65. வேட்டைக்காரர் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்)

66. வேட்டக்கொறவர் (சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்)

67. வரகனேரி கொறவர் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்)

